

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில், எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில், தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, திருக்கோவிலூர் ஒன்றியம், எடையூர் ஊராட்சியில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து அரிசி, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கினார்.

### பணியிடங்களில் பெண்கள்

# பாலின துன்புறுத்தல் சட்டம் முறையாகப் பின்பற்றப்படுகிறதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 11–

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையி;ல், பணியிடங்களில், பெண்கள் பாலின துன்புறுத்தல் சட்டம் 2013, ஒன்றிய அரசால் முறையாகப் பின்பற்றபடுகிறதா? என்றும் துறை சார்ந்த குறை தீர்க்கும் குழுக்கள் அனைத்து துறைகளிலும், பொதுத்துறை சார்ந்த நிறுவனங்களிலும் அமைக்கப்பட்டுள்ளதை அரசு உறுதி செய்யுமா? என்றும் பயிற்சிப் பெண்கள், ஒப்பந்;த அடிபடையில் பணிபுரியம் பெண்கள் இவர்களின் குறைகள் முறையாக கண்காணிக்கப்படுகிறதா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு துறையின் அமைச்சர்



திருமதி அன்னபூர்ணா தேவி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு துறையின் அமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு :

பணியிடங்களில், பெண்கள் பாலின துன்புறுத்தல் சட்டம் 2013, அரசு, மற்றும் தனியார் துறைகள் அனைத்திற்கும் பொதுவான சட்டமாகும் என்றும், அரசில் பணிபுரியும் பெண்கள், தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள், பயிற்சி;ப் பெண்கள், ஒப்பந்த வேலைபாடுள்ள பெண்கள் என்று அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொதுவான சட்டமாக, ஒன்றிய அரசின் பெண்கள் பாலின துன்புறுத்தல் சட்டம் 2013 விளங்கி வருகிறது என்றும், இச்சட்டம் ஒன்றிய அரசு துறைகள், மாநில அரசின் துறைகள், பஞ்சாயத்து அமைப்புகள் என அனைத்திற்கும் உரியதாகும் என்றும், முறையான அரசு பணியில் உள்ள பெண்கள், தற்காலிக பெண் பணியாளர்கள், ஒப்பந்தப் பணியாற்றும் பெண்கள், தனியார் அமைப்புகளில் உள்ள பெண்கள் என அனைவருக்குமான பாதுகாப்புச் சட்டமாகும் என்று அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், 10 பெண்களுக்கும் அதிகமாக பணிபுரியும் எல்லா இடங்களிலும் குறை தீர்க்கும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பஞ்சாயத்து அமைப்புகளிலும் இந்தச் சட்டம் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் என அனைத்து மாவட்ட அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையின் உதவியுடன் தலைமை தொழிலாளர் ஆணையர் இணைந்து செயல்பட்டு பெண்கள் பாலின துன்புறுத்தலை தடுக்க தேவையான இணையதள வசதிகள் அனைத்து பணியிடங்களிலும் ஏற்படுத்த ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பி அவை முறையாக செயல்படுகின்றதா என்பதையும் ஒன்றிய அரசு தொடர்ந்து கண்காணித்து வருகின்றது என்று அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி அவர்கள் விரிவான பதிலை அளித்துள்ளார்.

### இந்தியாவில் வெள்ள அபாய மாவட்டங்கள் எத்தனை?


# தமிழ்நாட்டுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், பிப். 11–

நாடு முழுவதும் வெள்ள அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை, கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசின் ஆதரவுடன் அனுமதிக்கப்பட்ட வெள்ள மேலாண்மை திட்டங்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மத்திய நிதி விவரங்கள் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவரமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார். கேள்வி எழுப்பினார்

இதற்கு பதில் அளித்து பேசிய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ராஜ் பூஷன் சவுத்ரி, இந்திய அரசு ஜல் சக்தி அமைச்சகம், நீர்வளங்கள், நதிகள் மேம்பாடு மற்



றும் கங்கை புத்துயிர்ப்பு துறை சார்பில் அளிக்கப்பட்ட பதிலில், மத்திய நீர் ஆணையம் வெளியிட்டுள்ள ”இந்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரப்பளவின் மதிப்பீடு – 2024 என்ற அறிக்கையின் அடிப்படையில்,

1986 முதல் 2022 வரை செயற்கைக்கோள் படத் தரவுகளை வைத்து இந்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மொத்த பரப்பளவு 21.213 மில்லியன் ஹெக்டேர் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்ட வெள்ள மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் 20.538 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு பாதுகாக்கப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் ராஜ் பூஷன் சௌத்ரி பதிலளித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ‘வெள்ள மேலாண்மை மற்றும் எல்லைப் பகுதி திட்டம் (FMBAP)’ என்ற மத்திய திட்டத்தின் கீழ்,

மாநில வாரியாக அனுமதிக்கப்பட்ட வெள்ள மேலாண்மை திட்டங்கள்,

அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட மத்திய நிதி விவரங்கள்,

மேலும் இதே காலகட்டத்தில் தமிழ்நாடு அரசுக்கு வெள்ள கட்டுப்பாடு மற்றும் ஆற்றங்கரை பாதுகாப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட மத்திய உதவி விவரங்கள் அனைத்தும் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்தது.

வெள்ளம் ஆண்டுதோறும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் சூழலில்,

மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு போதுமானதா?

தமிழ்நாடு போன்ற வெள்ள பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு நீதி செய்கிறதா?

என்ற கேள்விகளை எழுப்பும் வகையில்,

கே.ஆர்.என். இராஜேஸ்குமாரின் இந்த கேள்வி ராஜ்யசபாவில் முக்கிய அரசியல் கவனம் பெற்றுள்ளது.

### பாரத்நெட் திட்டத்தின் மூலம் ‘பிராட் பேண்ட்’ நிறுவுவது

# தமிழ்நாட்டில் எவ்வளவு விரைவில் முழுமை பெறும்?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, பிப். 11–

தமிழ்நாட்டில் எவ்வளவு விரைவில் பாரத்நெட் திட்டத்தின் மூலம் பிராட் பேண்ட் நிறுவுவது முழுமை பெறும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி கேட்டிருந்தார்.

இது தொடர்பான அவரது கேள்விகள் வருமாறு:–

(அ) தேசிய பிராட்பேண்ட் மிஷன் (NBM) 2.0 தொடங்கப்பட்டதிலிருந்து, ஆப்டிகல் ஃபைபர் விரிவாக்கம், கிராம பஞ்சாயத்துகள் மற்றும் ஆங்கர் நிறுவனங்களின் பிராட்பேண்ட் கவரேஜ் ஆகியவற்றில், குறிப்பாக தமிழ்நாடு, ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மகாராஷ்டிராவில் மாநில/யூனியன் பிரதேச வாரியாக, அடையப்பட்ட

(ஆ) ராஜஸ்தான் மாநிலத்தில், குறிப்பாக பாலி மக்களவைத் தொகுதியில், தேசிய பிராட்பேண்ட் மிஷன் 2.0 இன் கீழ் உள்ளடக்கப்பட்ட மொத்த கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை;

(இ) குறிப்பாக கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாடு, ராஜஸ்தான் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில், தொலைத் தொடர்பு ஊடுருவலில் உள்ள பிராந்திய மற்றும் கிராமப்புறநகர்ப்புற ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

(ஈ) 2024 ஆம் ஆண்டு வழித்தட உரிமை விதிகள் (RoW) மற்றும் மையப்படுத்தப்பட்ட வரிசை போர்டல் ஆகியவற்றின் தாக்கம், குறிப்பாக தமிழ்நாடு, ராஜஸ்தான் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் உள்கட்டமைப்பு பயன்பாட்டை விரைவுபடுத்துவதில்;

(இ) NBM 2.0 இன் கீழ், குறிப்பாக மகாராஷ்டிரா மற்றும் ஜல்கான் மக்களவைத் தொகுதிக்கு, மாநில வாரியாக அல்லது மாவட்ட வாரியாக ஏதேனும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;



(f) விக்சித் பாரத் 2047 இன் தொலைநோக்குப் பார்வையுடன், மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக, அடுத்த கட்ட பிராட்பேண்ட் மற்றும் மொபைல் உள்கட்டமைப்பு விரிவாக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் விவரங்கள்;

(g) பாரத்நெட் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளையும் முழுமையாக சேவைக்குத் தயாராக மாற்ற அரசாங்கம் முன்மொழியும் கால அளவு; மற்றும்

(h) மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் பிராட்பேண்ட் மற்றும் மொபைல் உள்கட்டமைப்பு விரிவாக்கத்தில் கடந்த 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட எதிர்காலத் திட்டம் மற்றும் விரிவாக்கத்தின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்ததை முன்னிட்டு ஆம்பூர் நகராட்சி அலுவலகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் சிற்றுண்டி வழங்கினார். உடன் நகர மன்றத் தலைவர் ஏஜாஸ் அஹமத்,துணைத் தலைவர் ஆறுமுகம், மாவட்ட அவைத் தலைவர் ஆனந்தன், நகர கிழக்கு செயலாளர் எம்.ஏ.ஆர்.ஷப்பீர் அஹமத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ‘திராவிட மாடல்’ அரசும் திருக்கோவில்களும்!

பல ஆயிரம் ரூபாய் கோடி செலவில் திருக்கோவில் திருப்பணிகள் ரூ.8500 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்பு, திருக்கோவிலின் வாடகை, கட்டணங்கள் மற்றும் குத்தகைதொகை ரூபாய் 1100 கோடி வசூலிப்பு என திருக்கோவில்களுக்கு திறன் மிக்க அரணாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் இருந்து வருகிறார்,

திராவிட முன்னேற்றக் கழக திராவிட மாடல் ஆட்சியில் திருக்கோவில்கள் ஜொலிக்கின்றன, ராஜகோபுரங்கள், கோவில் கலசங்கள், குடமுழக்குகள் கண்கொள்ளாக் காட்சி தருகிறது, தங்கத் தேர்கள் கிராம, நகர வீதிகள் விழாக்கோலம் பூண்டுள்ளது, இந்துக்களுக்கு எதிரான கட்சி என்ற போலி பிம்பம் உடைத்து எறியப்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் கலை, கலாச்சாரத்தை வளர்ப்போம், கலவரத்தை வளர விடமாட்டோம், அறம் வளர்ப்போம், கல்வி வளர்ப்போம் என செயல்பட்டுக் கொண்டு இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 2026ல் மாலை மரியாதையுடன் வரவேற்க காத்திருக்கிறது,



எத்தனை எத்தனை சவால்கள் எதிர் கொண்டுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற காலத்தில் கொரோனா பெரும் தொற்று பரவல், பேரிடர் பெருமழை, வெள்ள பாதிப்புகள், ஒன்றிய அரசு நிதி தராத சூழல், மசோதாக்களுக்கு ஒப்புதல் தர இழுத்தடிப்பு, கவர்னரின் தொல்லைகள் இதை எல்லாம் மீறி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்து இந்தியாவில் தலைசிறந்த , மாநிலமாக, முதல்வராக போற்றப்படுகிறார், நடைபெற்ற 10 தேர்தலில் வெற்றி பெற்று அரசியல் கட்சிகளுக்குப் பாடம் நடத்தியும், 2026ல் தொடர் வெற்றியும் பெற்று ஆட்சியும் நடத்தவும் போகின்றார்,

இந்த அரசுக்கு எதிராக பல்வேறு துறைகளில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகைகளில் பொய்யான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதில் ஒன்று தான் இந்துக்களுக்கு எதிரான இந்த அரசு செயல்படுகிறது என்று, அவைகள் அத்தனையும் இந்த ஐந்து ஆண்டுகளில் தவிடு பொடியாக்கி, மக்களின் இதயங்களில் மகுடம் சூட்டி உட்கார்ந்துள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள்,

இந்திய அரசியலில் மேலோங்கிய நிர்வாகத்தால், மிகச் சிறந்த ஆளுமை மிக்கவராக இருந்து வருகிறார், தன்னுடைய அமைச்சரவையில் மிகச்சிறந்த அமைச்சர்களை தேர்ந்தெடுத்து பதவி வழங்கி உள்ளார் என்பதற்கு சான்றாக தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் முன்னேறிய, தன்னிகரற்ற மாநிலமாகத் திகழ்கிறது, இந்திய நாட்டின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு மற்ற மாநிலங்களை காட்டிலும் உயர்வாகவே உள்ளது, அந்த வகையில் இந்து சமய அறநிலையத் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்களை அமைச்சர் ஆக்கியது, அமைச்சர் அவர்களும் தனக்கு வழங்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறையை திருக்கோவில் திருப்பணிக்கு தனக்கு வழங்கப்பட்ட அங்கீகரமாக கருதி திருக்கோவில் திருப்பணிகளில் அக்கறை காட்டி மக்களின் மனம் குளிர திருக்கோவில் பணி ஆற்றி வருகின்றார். திருக்கோவில் ஏதேனும் பிரச்சனை என்று தெரிய வந்தால் அந்த இடத்திற்கு அலுவலர்கள் செல்வதற்கு முன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே நேர் சென்று பிரச்சினை தீர்த்து வைப்பது மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் திருக்கோவிலுக்குச் சொந்தமான ரூபாய் 8400 கோடி மதிப்பிலான சுமார் 8100க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது, 2.24 லட்சம் ஏக்கர் நிலங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு H&RCE என்ற அடையாளங்கள் பதிப்பு செய்யப்பட்டுள்ளது, மேலும், திருக்கோவிலின் 5400 ஏக்கர் நிலங்கள் பல்வேறு பெயர்களில் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்ததை கண்டறிந்து அதனை ரத்து செய்யப்பட்டு, திரும்ப திருக்கோவில் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது, வசூலிக்கப்படாமல் இருந்த கடை, கட்டிடங்கள் வாடகை மற்றும் குத்தகை தொகை என ரூபாய் 1046 கோடி வசூலிக்கப்பட்டு கோவில் சொத்துகள் பாதுகாக்கப்பட்டு திருக்கோயில் சொத்துகளுக்கு திராவிட மாடல் பாதுகாப்பாக உள்ளது,

சுமார் 12800க்கு மேற்பட்ட திருக்கோவில்களில் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோவில் திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள ரூபாய் 8600 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபாய் 4992 கோடி மதிப்பீட்டில் சுமார் 16,595 திருக்கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று முடிந்துள்ளது, 4000க்கும் மேற்பட்ட திருக்கோவில் திருக்குடமுழக்குகள் பணிகள் நடைபெற்றும், மற்றும் பலகோடிக்கு மேலான பொருட் செலவில் சிறிய, பெரிய திருக்கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்றும், மேலும், 60 முதல் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கோவில்களுக்கு குடமுழக்கு, திருக்குட நன்னீராட்டல் விழாவை அரசால் ஏற்று நடத்தி மக்கள் பாராட்டு பெற்றுள்ளது தற்போதும் கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட திருக்கோயில்களில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவுக்கான ரூபாய் 36 கோடிக்கான மானியம், ஆன்மீகப் பயணத்திற்கு 1.17 கோரிக்கை மானியம் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது, மேலும், அதிக எண்ணிக்கையில் வருகை புரியும் முக்கிய திருக்கோவில்களான திருச்செந்தூர், சமயபுரம், ராமேஸ்வரம், பழனி, அழகர்கோவில், மருதமலை, திருவேற்காடு, பெரியபாளையம் மற்றும் சிறுவாபுரி உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள சுமார் 1800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 1973ல் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி முடிவுற்ற மயிலாப்பூர் திருக்கோவில் திருப்பணி, தற்போது முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கையில் சுமார் 20 கோடி மதிப்பீட்டில் கற்கோவிலாக கட்டப்பட்டு வருகிறது,

மலைப்பகுதி திருக்கோவில்களுக்கு இலகுவாக சென்று வரும் வகையில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் கம்பிவட ஊர்திகள், கும்பகோணம் அருள்மிகு சுவாமிநாத திருக்கோவில், மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மின்தூக்கிகள் நிறுவும் பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்று வருகின்றது,

சாதி வேறுபாடுகள் அற்ற வகையில் இறைத்தொண்டு புரிய அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற கலைஞரின் சட்டத்தை தொடர்ந்து, பயிற்சிகள் அளித்து பெண் ஓதுவார்களும் நியமிக்கப்பட்டுள்ளனர், அன்னைத் தமிழில் அர்ச்சனைகள், முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி அருள் பிரகாச வள்ளலாரின் 200ம் ஆண்டு பிறந்தநாள், தர்மசாலை தொடங்கப்பட்ட 156 வது ஆண்டு, ஜோதி தரிசனத்தின் 152வது ஆண்டு இதனை முப்பெரும் விழா, தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு ரூபாய் 19 கோடி செலவில் மணிமண்டபம், திருக்கோவில்களில் தல வரலாறு, தல புராணம், கட்டடக்கலை கல்வெட்டுகள் குறித்த 500க்கும் மேற்பட்ட தொன்மையான அரிய நூல்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு, புத்தக விற்பனையும் தொடங்கப்பட்டு உள்ளது. பக்தர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வகையில் சி.சி.டி.வி. கேமராக்கள், சிலைகள் பாதுகாப்பு, இலக்கிய ஓலைச்சுவடுகளை எல்காட் நிறுவனம் மூலம் ஒளிவருடல் பாதுகாப்பு செய்யப்பட்டது,

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு திருக்கோவில் சார்பாக சீர்வரிசைகளுடன் இலவச திருமணங்களை நடத்தி வைக்கப்படுகிறது, பல்வேறு திருக்கோவில்களில் நாள் முழுதும் அன்னதானமும், பலநூறு திருக்கோவில்களில் ஒருவேளை அன்னதானமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, ஒருகால பூஜை கூட செய்திட முடியாத நிலையில் இருந்த திருக்கோவிலுக்கு ஒரு லட்சத்தில் இருந்து இரண்டரை லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு பூசைகள் தடையின்றி நடந்து வருவது, மேலும், திருக்கோவில்களில் அர்ச்சகர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் குடியிருப்புகள், உதவித் தொகை, அவர்களின் குழந்தைகளின் மேற்கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருவதும் இதே திராவிட மாடல் ஆட்சியில் தான். திராவிட மாடல் ஆட்சியில் இறையன்பர்களுக்கு இறைப்பசி தீர்த்தும், மனம் குளிர வயிற்றுப் பசி தீர்க்க, பல கோடி ரூபாய் செலவில் அன்னதானக் கூடங்கள், அறிவு பசி தீர்க்க கல்லூரிகள் என மக்கள் மகிழ்ந்து வருகிறார்கள்,

திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் தமிழ்நாடு இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும், துறைகளுக்கும் முன்னோடியாக உள்ளது. இந்தியாவின் பொருளாதாரத்தை தமிழ்நாடு நிர்ணயிக்கும் வகையில் உயர்ந்துள்ளது, ஊடகங்களும், பத்திரிகைகளும், நீதிமன்றங்களும் பாராட்டி வருகிறது, வடமாநில மக்கள் தமிழ்நாட்டின் முதல்வர் ஸ்டாலின் பெயரை உச்சரிக்கும் அளவில், தங்கள் மாநில முதல்வரும், மாநிலமும் தமிழ்நாட்டை போல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், பல ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தேர்கள் வீதிகளில் உலா வருவதை வணங்கும் அதே வேளையில் முதல்வர் ஸ்டாலின் அவர்களையும் மக்கள் வாழ்த்த மறப்பதில்லை.

**த.சௌந்தரராஜன்**
இணை இயக்குனர் (ஓய்வு)
நகராட்சி நிர்வாகத் துறை.



புது தில்லியில் உள்ள ஸ்கோச் நிறுவனம் மக்களின் பயன்பாட்டிற்குப் பயனளிக்கும் அரசுத்துறை நிறுவனங்களுக்கு கோச் தங்க விருது வழங்குகிறது, அந்த வகையில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறைக்கு ஸ்கோச் விருது வழங்கி சிறப்பித்ததுள்ளது.

இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் மதநல்லிணக்கம் பறைசாற்றும் வகையில் கிருத்துவ தேவாலயங்கள், மசூதிகளை தொன்மை மாறாமல் பழுதுபார்த்தல் மற்றும் நிதி உதவி வழங்கப்படுகிறது. ஜெருசலம், இஸ்ரேல், எகிப்து, ஜோர்டான் புனித யாத்திரைக்கு மானியம், இஸ்லாமிய மக்களுக்கு ஹஜ் புனிதயாத்திரை, மூத்த இந்து பக்தர்களுக்கு ராமேஸ்வரம் காசி அம்மன் கோவில்கள், வைணவ திருத்தலங்கள் மற்றும் அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லா ஆன்மீகப் பயணங்கள் என மதநல்லிணக்கம் பேணப்படுகிறது. தற்போதும் கூட உலாமாக்களுக்கு ரூபாய் 5000 என ஓய்வூதியம் உயர்த்தி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது, மேலும், குடும்ப ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது, இருசக்கர வாகன மானியக் கடன் வழங்கப்பட்டுள்ளது, வக்பு தீர்ப்பாயம் கோயம்புத்தூரில் அமையப்பட உள்ளது. இவ்வாறாக இந்து, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களின் மதநல்லிணக்கமிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோவில்கள் மீது காட்டிவரும் அக்கரையின் காரணமாக, மக்கள் திராவிடமாடல் அரசும் திருக்கோவிலும் என புகழ்ந்தும், நம்பிக்கை கொண்டும், உபயதாரர்கள் நிதியினை சுமார் ரூபாய் 1550 கோடிக்கு மேல் வாரி வழங்கி உள்ளனர். இந்நிதியினை 13 ஆயிரம் திருக்கோவில்கள் திருப்பணிகள் மேற்கொள்ள அரசும் அர்ப்பணித்து நம்பிக்கையை உறுதி செய்துள்ளது.

உலகத்திற்கு பொது மறையும் பொது நீதியும் வழங்கிய அன்னை தமிழ் நாட்டில், ஆன்மிகத்தை அரசியலாக்கும் சூழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தகர்க்கப்பட்டு, மனிதநேயம் இம்மண்ணில் காக்கப்படுகிறது, திருக்கோயில் திருப்பணிகளால் மின்னும் தங்க கலசங்கள், புதுப்பொலிவு பெற்ற அழகிய ராஜகோபுரங்கள், தங்க வீதி உலா திருத்தேர்களின் பவனியை கண்டு வணங்கும் அதே வேளையில் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை வாழ்த்தி 2026ல் தொடரும் திராவிடமாடல் ஆட்சிக்கு சாட்சியாக இருக்கிறார்கள்.